விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

அழகிய ஆரம்பம்...

இனிய இதழ்

indhrumail@gmail.com
70940 53241
மாதமிருமுறை இதழ்
16-30 ஜூன் 2025
17-ம் இதழ்

19 எழுத்தாளர்களின் கைவண்ணத்தில்...



திருச்சிற்றம்பலம் சுரேஷ்

மின்னல் கதைகள்

மகிழ்ச்சி

கணவரை கொலை செய்துவிட்டு..
சந்தோஷம்மாக முன்னாள்
காதலருடன் சிறைக்கு சென்றாள்
ஏதோ சாதித்துவிட்டோம் மகிழ்ச்சியில்.

காயத்திரி

அப்பாவின் காவல்துறை சல்யூட்டை
அடக்கத்துடன் IAS அதிகாரியான
காயத்திரி ஏற்றுக்கொண்டார்
உள்ளூர் திருவிழாவில்.

கைரேகை

பெரிய படிப்பு படித்த
கந்தசாமி உள்ளூரில்
இயங்கி வந்த ரேஷன் கடையில்
கைரேகை பதிந்து உணவு
பொருட்களை வாங்கினார்.

முட்டை

முட்டை விற்கும் ரமேஷ்..
தன் மகன் படிப்பில் முட்டை
வாங்க கூடாது என இறைவனை
வேண்டினார்.

இன்று ஈ இதழ்
70940 53241
indhrumail@gmail.com

அனைவருக்கும் வணக்கம். புதிய எழுத்தாளர்கள் (இன்று இதழுக்கு) தங்கள் படைப்புகளை தொடர்ந்து அனுப்பத்துவங்கியுள்ளனர். வரவேற்கிறோம். சில படைப்புகள் நீண்டதாக இருப்பதால் அவற்றை சுருக்க முயற்சித்தோம். சுவை குறைந்ததால் அவற்றை வெளியிட இயலாமல் உள்ளது. எனவே படைப்பாளர்கள் இன்றுவின் இடவசதிக்கேற்ப சுருக்கமாகவும், சுவையாகவும் படைக்கவும்.

பத்திரிக்கையாளர்களின் படைப்புகளை அப்படியே வெளியிடுகிறோம். அவர்கள் படைப்புகள் மீது உள்ள நம்பிக்கையில்... எனவே கருத்துக்களை நாசூக்காக கையாளுங்கள். படைப்புகள் யாரையாவது புண்படுத்துவது போல் இல்லாமல் படைப்புகளை உருவாக்கவும்.

நமது இதழில் மைக்ரோ கதை, கவிதை, சிரிப்பு, வலையில் வந்தது, விழிப்புணர்வு செய்திகள், காதல் டயலாக், கண்ணாடிப்பக்கம், துணுக்குகள், வீட்டுக் குறிப்புகள், நேரம் போன்ற பல தலைப்புகளில் வெளியாகிறது. விரைவில் மேலும் சில தலைப்புகளில் படைப்புகள் வெளியாகவிருக்கிறது...
நீங்களும் விரும்பினால் 5 வாரம் வருவதைப்போல் தொடர் எழுத முயற்சி செய்யவும். 5 வாரத்திற்கான தொடரையும் ஒரே நேரத்தில் கொடுத்துவிடவேண்டும். வாழ்த்துக்கள்...

ஆசிரியர்

இன்று ஈ பதிப்பு - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை வெளியிடுபவர், ஆசிரியர். வெ.கோபிநாத்

52



உயிர்களைக் காக்கும் இரத்த தானத்தை இது வரை 52 முறை இரத்த தானம் வழங்கிய பன்முக எழுத்தாளர், காதல் கவிஞர் வேலூர்

திரு.முத்து ஆனந்த்

அவர்களை வாழ்த்துகிறோம்...

இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

இன்று ஈ இதழ்
70940 53241
indhrumail@gmail.com

இன்று ஈ பதிப்பு இன்று ஈ 70940 53241 Whatsapp



கவிதை

-லி.நௌஷாத் கான்-
செல் : 971561093550

எதை,எதையோ
இரசிக்கும் அவளது கண்கள்
ஒரே முறை
என்னை பார்த்தால் கூட
வரம் தான்!

ஆசைப்படாத புத்தனாக மாற
ஆசைப்பட்டேன்
கடந்து செல்லும் பாதையில்
உன்னை கண்டதால்
புத்தனாக மாறுவதே பாவம்
என உணர்ந்து கொண்டேன் !

உனக்கு
என்ன வேண்டுமென்கிறாய்?
அந்த காடு
என்னை அழைக்கும்
கடைசி நொடி வரை
உன்னை
காதலித்து கொள்கிறேன்!

இப்பிரபஞ்சத்தில்
எது பேரழகு என்று
கடவுள் கேட்டான்?
உன் வெட்கத்தை விடவா
வேறொரு அழகு
இருந்து விட போகிறது?!

உன்னோடு இருக்கையில்
நீளும் இரவு கூட
குறைந்து தான் போனதடி
பாவம் அடியேன்
பகலிடம் கடன் கேட்கவா?!
இரவிலேயே நின்றால் தானென்ன!!
சுற்றும் பூமி

நீ பார்த்து தானடி
போனாய்
எனக்கு ஏனடி
வேர்த்து போனது
நீ பெண்ணா?
நீ தேவதையா?
நீ இராட்சசியா என
விடை தெரியாமலே
இன்னமும்
காதலித்து கொண்டிருக்கிறேன்!

உன் பாதங்களை எடுத்து
என் மடி மீது வையடி
அந்த இளையராஜாவே
பொறாமை படும் படி
புதிய சிம்பொனி
இசைக்க போகிறேன்!

இதயம் தொட்டு சொல்கிறேன்
இயற்கையை
மெய்மறந்து நீ இரசிக்கிறாய்
இயற்கை
எல்லாம் துறந்து
உன்னை இரசித்து கொண்டிருக்கிறது!

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp



மெக்கானிக் கதைகள்

முத்து ஆனந்த் வேலூர்
செல் : 7010482479

”ஏண்டி, வண்டி அடிக்கடி “ரிப்பேராகுதுங்கறதுக்காக மெக்கானிக்கை லவ்“ பண்றேங்கறியே! இது நியாயமாடி?!” என்ற தோழியைத் “திரு திரு“வெனப் பார்த்தாள் நிலா!

துறுதுறுவெனவிருக்கும் தன் “புது மனைவி“யை மிகவும் “வித்தியாசமாக“ப் பார்த்தான் “மெக்கானிசமாக“ வேலை செய்யும் முருகேசன்!

“மெஷின் மாதிரி ஒரே இடத்தில் இருக்காம அங்கே இங்கே “ஜாலியா“ போயிட்டு வாடா!“ என்று தன் மகனிடம் சொன்னார் மெக்கானிக் சம்பத்!

மெக்கானிக் மாதிரி ரோபோ மாதிரி இல்லாம “செம ஜாலியா“ இருக்கான்டி மதன் அதனாலதான் அவனை எனக்கு “ரொம்பப் பிடிச்சிருக்கு“ என்றாள் மாதுரி!

டூ வீலர் மெக்கானிக் மாலதியை உயிருக்கு உயிராகக் காதலித்தான் ஃபோர் வீலர் மெக்கானிக் விஸ்வா!




திருடுவதைக்கூட
ரசிக்க முடியுமென்று
உன் கண்கள்
என்னைக்
கள்ளத்தனமாகப்
பார்த்த போது தான்
உணர்ந்தேன்!

முத்து ஆனந்த்
வேலூர்

indhrumail@gmail.com
70940 53241

கவிதை

காதல் தடம்



கோவை கவி புவனா

பார்வைகள்
உன்னைக் காணவே
பரிதவிக்கக்
கால்களும் வழி மாறி
உன் வீதி வழியே
நடக்க
எதுவுமே என் வசம்
இல்லையே
என்னை உன் வசம்
தந்த பின்னே!!!!

மாநகரம் !

மாநகரப் புழுதி
காற்றினிலே கலந்திட
நடைபயிற்சி ஒரு சிலரின்
தினம் சவால்...

தீப்பெட்டியாய் அடுக்ககங்கள்
சன்னலோரம் மனித தலை
சாமந்தி போல் பூத்திருக்க...

சாரை சாரையாய்
எறும்பாய் ஊறும்
சிற்றுந்துகள்...

நடைபாதை
நடப்பதற்கே
அலங்காரச் சொற்கள்...

இரு சக்கர
வாகனங்கள்
கம்பளிப் பூச்சியாய்...

பேருந்துவின்
அலறல்
செவியினிலே அறைந்திட...

பாறையில் ஓடம் நீர் போல
மனிதன் சாலையில்
விரைவாய் புகுந்திட...

பலாப்பழ ஈக்கள் போல்
மக்கள் கூட்டம்
அலை மோத...

மாநகர வாழ்க்கையும்
சுவாரசியமான
வாழ்க்கைதான் !



பி.ஆர்.கிரிஜா
சென்னை

இனிய
நண்பர்களே...
உங்கள் நண்பருக்கு
அழகிய ஆரம்பம்
இன்று - ஈ
இதழை அனுப்பி
இதழின்
வளர்ச்சிக்கு
உதவுங்கள்...


இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

இன்று ஈ இதழ்
70940 53241
indhrumail@gmail.com

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

மைக்ரோ கதை

வசதிபடைத்தவர்!



மலர்மதி
அலைபேசி:
8667417874

தன்னுடைய வங்கி கணக்கிலிருந்து ஐம்பது லட்சம் ரூபாய் பணத்தை எடுக்கப்போனார்கண்ணப்பன். பையிலிருந்து காசோலையை வெளியே எடுத்தவர், அதை நிரப்ப, அருகில் இருந்தவரிடம் பத்து ரூபாய் பேனாவை இரவல் வாங்கினார்!

கதிரொளி



சசிகலா
விஸ்வநாதன்

கதிரேசன் இழுத்து ஒரு மூச்சு விட்டதில், சற்றே ஆசுவாசம் அடைந்தான். வீட்டுச் சிறையிலிருந்து தப்பி ஓடி வந்தாயிற்று. நேற்று மாலையிலிருந்து அப்பாவும் சிற்றப்பாவும் செய்த வன்முறையும், வீட்டில் நடந்த அமளியும் மனதில் வந்து போயிற்று.

காரோட்டி மால கொண்டையா தயவால் இன்று சென்னை வண்டியில் ஏறியாயிற்று. இனி என்ன? நண்பன் குமார் எக்மோர் ஸ்டேஷன் வந்து அழைத்துச் செல்வான். இன்று இரவு சுற்றும் முற்றும் உறங்கும் மனிதர்களை சமாளித்தால் போதும்.

ஏற்கனவே அவன் படித்த கம்ப்யூட்டர் படிப்பிற்கு வேலையில் சேர உத்தரவாதம் கடிதம் ஈ மெயிலில் அனுப்பி இருந்தார்கள். பதினைந்து நாள் கம்பெனி விருந்தினர் மாளிகையில் அறையும் இருந்தன

கடைசி ஒரே ஒரு தடைக்கல். ஒரு திருநங்கையை இந்த வேலைக்கு தேர்ந்தெடுத்திருப்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்களது இகழ்ச்சி புன்முறுவலை சந்தித்தே ஆக வேண்டும். இப்போது இவள் முகத்தில் ஒரு விரக்தி புன்னகை. எவ்வளவு பணமிருந்தும் வீடென்று ஒன்று எனக்கில்லை. சரி! அதனால் என்ன? நான் படித்த படிப்பினால் சுயமரியாதையுடன் வாழ்வொன்று ஒன்று கிடைக்குமா? கிடைக்கும்; என்ற நம்பிக்கையில் தானே இந்தப் பயணம்.

”ஏறுங்க! ஏறுங்க! ”
எவரோ எவருக்கோ சொல்லுவது, அவனுக்கான மந்திரம் போல் அவள் செவியில் விழ;
துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் கதிரேசன் என்னும் கதிரொளி.

இன்று ஈ இதழ்
70940 53241
indhrumail@gmail.com

வரை...வை...

ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம்
கைப்பேசி -9600886441.

செருப்பு

கலவர எண்ணங்களைத் தோற்றுவிக்குது
கோவில் வாசலில்
கழற்றி விட்ட புது செருப்பு

பசி

ஏழைத் தாயின் பசி
பறந்தே போனது
குழந்தையின் சத்தான புன்னகையில்

காலம்

எங்கே ஒளித்து வைத்தாலும்
தொலைந்து தான் போகுது
காலம்

கண்ணாடி

கண்ணாடியைப் பழிக்குது மனசு
முதுமையின் அணைப்பில்
மூழ்கியதை அறியாமல்

மரணம்

உயிர் பறவையை கடைசியில்
உறவு கொண்டாடும்
அந்நியன்

கலர் கலர்
மொய் கவர்

20 கலர் கவர்கள் உங்கள் பெயர் ப்ரிண்ட் செய்து தரப்படும். கவர் தானாக ஒட்டிக் கொள்ளும் (Auto Paste) வசதியுடன் உள்ளது. வித்யாசமாக உங்கள் மொய் பணத்தை செலுத்தலாம்.

20 கவர்ஸ் Rs.150 + Courier Rs.50 = Rs.200
G.Pay ... 7094053241 and
send your address in Whatsapp...

இன்று இதழை உங்கள்
நண்பருக்கும் அறிமுகப்படுத்துங்கள்

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

இன்று ஈ இதழ்
70940 53241
indhrumail@gmail.com

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

கவிதை

வகுப்பறையில்
தமிழாசிரியர்,
"புலி பசித்தாலும்
புல்லைத் தின்னாது"
என்று கூறிவிட்டு
என் மகனிடம்,
"இது போல நீ
ஒன்று கூறு
பார்ப்போம்"
என்றதற்கு,
இவன்
"எலி பசித்தாலும்
எறும்பைத் தின்னாது"
என்றானாம்!
ஆசிரியர் திகைத்து,
வாயைப் பிளந்தாராம்!
பின்னே!
"கம்பன் வீட்டு
கட்டுத் தறி மட்டுந்தான்
கவி பாடுமா"...
நகைச்சுவை எழுத்தாளர்
வீட்டு நாதாங்கியும்
நக்கலடிக்கும்!


டீ. என். பாலகிருஷ்ணன்
சென்னை 600091
கைபேசி: 9884808965

மழையில் நனைவது
மயில்களுக்கு பிடிக்குமாம்...
மயிலே...நீ நனைந்து
என்னை காய
வைப்பதேன்...?




கவிஞர்.இல.இரவி
செ.புதூர்
செல்:9952113194

ஆன்ட்ராய்டு காலங்களில்
காணாமல் போனவர்கள்
சூடிய சுடர்கொடிகள்...



முடிந்தளவு பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்ப்போம்

விசிறி வலை...



மீளும் அன்பிற்குப் பெரு சுகம்
இருக்கத்தான் செய்கிறது...
முதன் முதலில்
பெருங்காதலுக்கு வீசிய
விசிறி வலை ஞாபகங்களை
நினைத்துப் பார்க்கையில்
உதட்டைக் கடித்து
புன்னகைத்துத் தொலைகிறேன்...

-சு.மூன்சுதாகரன்,
வானவன்மாதேவி.

இன்று ஈ இதழ்
70940 53241
indhrumail@gmail.com

துணுக்குப் பகுதி



தொகுப்பு
ஆ. ராதாகிருஷ்ணன்.
வாணியம்பாடி செல் 9442811258

1. விநாயகரை ஒரு முறை வலம் வர வேண்டும்.
2. சண்டிகர் இரண்டு மாநிலங்களுக்குத் தலைநகர்.
3. மூன்று பால் உடைய திருக்குறளில் மூன்று என்று மூன்று குறட் பாக்களில் வருகிறது.
4. தேனி, பட்டாம் பூச்சி, தட்டாரப் பூச்சி, வண்டு இந்த நான்கு வகைகளுக்கும் நான்கு இறக்கைகள்.
5. மண் புழுவிற்கு ஐந்து இதயங்கள்.
6. இரத்தின கிரி தங்கத்தேர் ஆறு கிலோ தங்கத்தால் ஆனது.
7. திருப்பதி ஏழு மலைகள் மீதிருக்கிறது.
8. சீனர்களின் அதிர்ஷ்ட எண் எட்டு.
9. இராமானுஜர் ஒன்பது நூல்கள் எழுதியுள்ளார்.
10. குதிரையிடம் பத்து முழம் தள்ளி நிற்க வேண்டும்..
11. அமெரிக்கச் சுதந்திரச் சிலையின் தலையில் தெரியும் நட்சத்திரம் பதினோரு முனைகளைக் கொண்டது.
12. இந்தியக் கடல் எல்லை பன்னிரண்டு மைல் தூரம்.
13. பரி பாடல் பாடிய புலவர்கள் பதின் மூன்று பேர்.
14. ஏலகிரி மலையில் பதினான்கு கொண்டை ஊசி வளைவுகள் இருக்கிறது.
15. ஒட்டகம் மணிக்குப் பதினைந்து மைல் வேகத்தில் ஓடும்.

தமிழ்நாடு மின்சார வாரியம் (TNEB) புகார்களைப் பதிவு செய்ய பல வழிகளை வழங்குகிறது. பொதுவான விசாரணைகள் மற்றும் உதவிகளுக்கு, நீங்கள் 94987 94987 என்ற எண்ணை அழைக்கலாம் . மின்வெட்டு புகார்களுக்கு, நீங்கள் 1912 (BSNL பயனர்களுக்கு) அல்லது 0441912 (BSNL அல்லாத பயனர்களுக்கு) என்ற எண்ணை அழைக்கலாம். கூடுதலாக, நீங்கள் TNEB-ஐ அவர்களின் வலைத்தளம், TANGEDCO மொபைல் செயலி அல்லது 94458-50811 என்ற எண்ணுக்கு WhatsApp செய்தியை அனுப்புவதன் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp

இன்று ஈ இதழ்


indhrumail@gmail.com

70940 53241

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

கவிதை

கண்களில் காந்தம் வைத்தாய்
இரும்பென்னை இழுத்து விட்டாய்
மூச்சுக் காற்றால் என்னை
ஊதியே கனலாக்கினாய்
சம்மட்டி பலமெல்லாம்
சிரிப்பாலே சாய்த்து விட்டாய்
கொல்லன் தானே தங்கச்சரடு
இடுவானா ? கழுத்தில் என்றே
ஐயம் வேணாம் கண்ணே
ஐப்பசியில் கெட்டி சம்மதமா?



கவிஞர் அசோகன்
சென்னை

நீரருந்தியும் கசிகிறது பசி
ஏழையின் வயிற்றில்
ஈரத்துணி..!

ஆதி அந்தம்
தேடி அலைந்தும்
அகப்படாத கடவுளெனவே
காதல்..

என் நினைவிலிருந்து
சற்றே தள்ளிதானிரேன் நீ...
நானாவது நிம்மதியாய்
இருந்துவிட்டு போகிறேன்...

இன்று ஊரடங்கு உத்தரவு
என்கிறாய் நீ..
என்றோ நான்
உன்னில் அடங்கியதை
அறியாமல்....




சசிகலா திருமால்
கீழப்பழுவூர்

நின் மீதான
கோபங்களும் தாபங்களும்
பேரன்பின் விளிம்பில்
பிழைத்தே
இன்னமும்
உயிர் சுமந்துக்
கொண்டிருக்கிறது
நம் காதல்...

விழிகளால் வலை விரிக்கிறாய் நீ
உன் போதை பார்வையில்
மோதி விழுகிறேன் நான்....

பெண் மனது

பேசிப் பழகுவதால்
பெண்கள் மயங்குவரோ
பாசம் மிகுந்தவராய்ப் பழகுவரோ
பேசாத உள்ளத் துணர்வுகளை
ஊனுயிராய் மதிப்போரை
உள்நெகிழ்ந்து நேசிப்பார்
உவந்து!!



குடந்தை
பரிபூரணன்.

அழகிய ஆரம்பம்...
இன்று எ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று எ இதழ் | இன்று பதிப்பு | 7094053241 Whatsapp

Police Service - 112,100
Fire Service - 101
Ambulance Service - 102
Traffic Police - 103
Disaster Management - 108
Child Line - 1098
Railway Inquiry - 139
Anti-Corruption - 1031
Rail Accident - 1072
Road Accident - 1073
CM Helpline - 1076
Crime Satire - 1090
Women Helpline - 1091
Earthquake - 1092
Child Abuse Help - 1098
Farmer Call Center - 1551
Citizen Call Center - 155300
Blood Bank - 9480044444
Cyber Crime - 1930
Gas Complaind - 1906-
EB Complaind - 94987 94687
1912, 9445850811

Su	M	Tu	We	Th	Fr	Sa
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30					

அழகிய ஆரம்பம்... இன்று எ இதழ் June 2025

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

சிரிப்பு

" இந்த ஹோட்டல் முதலாளிக்கு தமிழ்நாட்டு பற்று அதிகம்!"
" அதுக்காக மைசூர் போண்டா பெயரை "மயிலாப்பூர் போண்டா"ன்னு மெனு கார்டுல எழுதி வச்சிருக்கறது நல்லாவா இருக்கு!?

- கயத்தை சத்யா

"தலைவர் ஏன் "கண்டிஷன் பெயில்"ல வர மாட்டேன்னு சொல்லிட்டாரு?"

"தலைவருக்கு யார் "கண்டிஷன்" போட்டாலும் பிடிக்காதாம்!"

முத்து ஆனந்த் வேலூர்

தூக்கத்துல மகளிரணித்தலைவி பேரைச்சொல்லி உளர்றார்னு தலைவரை ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணினாங்களே, இப்ப எப்படி? நர்ஸ் பேரைச் சொல்லி உளர்றாரு!

சி.ஆர்ஹரிஹரன்,ஆலுவா

இனி எம்புருஷன அடிக்கக் கூடாதுன்னு முடிவு பன்னிட்டேன்டி

ஏன்டி?

என்னை கடுப்பேத்தற மாதிரி அடிக்கும்போது சிரிக்கறாரே

ஏ.முர்த்தி,புல்லரம்பாக்கம்
செல் : 9600886441

யார்..அவர்.?ஒரு வாரமா ...மகாராணியை பார்த்து...பேசிவிட்டு செல்கிறார்.!?.

மன்னா...!நீங்க அடிக்கடி போருக்கு... செல்வதால்...உங்க பெயரில் L.I.C எடுக்க சொல்லி...கேட்க வருகிறார்.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்

இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

வீட்டுக் குறிப்புகள்



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி
செல். 9944284135

1. சப்பாத்தி மாவு பிசையும் போது அதனுடன் மிளகாய் தூள் மஞ்சள் தூள் சீரகம் கொஞ்சம் தயிர் சேர்த்து நன்றாக பிசைந்து சப்பாத்தி சுட்டால் மசாலா சப்பாத்தி போன்று சுவையாக இருக்கும்

2. சமைக்கும்போது குழம்பு பொங்கி வழிவதை தடுக்க பாத்திரத்தில் உள் பகுதியில் என்னை தடவி குழம்பு வைத்தால் குழம்பு பொங்கி வழியாது

3. தக்காளி பழத்தை மிக்ஸியில் அரைத்து அதை கோதுமை மாவுடன் பிசைந்து பூரி சுட்டால் சுவையான தக்காளி மசாலா பூரி ரெடி


இணையவழி மோசடிக்கு பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

முகவர்கள் தேவை

- நீங்கள் LIC, Post Office முகவரா?
- தாலுக்காவிற்கு ஒருவருக்கு மட்டுமே முகவர் வாய்ப்பு...
- பகுதி நேரமாக வேறு வேலை தேடுபவரா?
- ஊரில் அதிகம் நண்பர்களை கொண்டுள்ளீர்களா?
- உங்கள் விபரங்களை 7094053241 என்ற எண்ணுக்கு உங்கள் சுய விபரங்களை அனுப்புங்கள்...



indhrumail@gmail.com
70940 53241



எப்படி படிப்பது என்ற குழப்பமா?

நீங்கள் TNPSC தேர்வுக்கு படிக்கிறீர்களா?

சிறந்த திட்டமிடல் கொண்ட புத்தகம்...

புத்தகம் 100.00
கூரியர் 50.00
மொத்தம் 150.00
G.Pay 7094053241

வீட்டில் வீண் செய்த நேரத்தை, ரோட்டில் சரிசெய்ய நினைக்காதீர். சாலை விபத்துகளை தவிர்ப்போம். 🙏

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்

அடுத்த இதழ் வெளியாகும் நாள்
2025 ஜூலை - 9.
படைப்புகளை 07.07.2025-க்குள் அனுப்பிவைக்கவும்.

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp


அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

70940 53241

indhrumail@gmail.com





சத்யா பிரியன்

காதல் டயலாக்

”ஏண்டி, உன் ஆளு
ஆல்ரவுண்டராமே!”

ஆமாடி, ஆனா அது
“விளையாட்டு“ல!”
”இப்பல்லாம் “காதல்“கூட
ஒரு “விளையாட்டு“தானேடி!”



கதைகளில், கவிதைகளில் வரும் அம்சங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

இன்று ஈ பதிப்பு -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை
வெளியிடுபவர், ஆசிரியர். வெ.கோபிநாத்

செல் 7094053241 indhrumail@gmail.com

இன்று இதழை படித்ததற்கு
நெஞ்சார்ந்த நன்றி...



THANKS
Chat GPT
Meta AI &
All
Social Media

இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp